பொதுப் பணித் துறை அமைச்சருக்கு நேரடியாக தொடர்பு இல்லாத காரணத்தாலும் எப்படியோ இந்தக் கேள்வி அவர்களுக்குப் போய்விட்ட காரணத்தாலும் முழுமையான தகவலை அவர்கள் இங்கே தர இயலவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சராக இருந்தவர். காமராஜ் அவர்களும் தமிழகத்தின் முதலமைச்சராக இருந்தவர். ஆனால் அண்ணா நினைவாலயத்தைப் பராமரிக்கும் அளவிற்கு, காமராஜ் நினைவு ஆலயத்தை அரசு பராமரிக்கவில்லை என்பது எங்களுடைய கருத்து. எனவே இந்தக் குறையைப் போக்குவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தக் கேள்வி வேண்டாம்.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையில் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

(அ) கவிஞர் இரபீந்திரநாத் தாகூருக்குப் புகழஞ்சலி.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது இந்திய துணைக் கண்டத்தில் தேசிய ஒருமைப்பாட்டைக் குலைக்கும் விதத்தில் பல தீய சக்திகள் சில மாநிலங்களில் முயற்சிகளை மேற்கொண்டு உள்ள இந்த நேரத்தில் தேசிய ஒருமைப்பாட்டுக்காக நம்முடைய நாட்டிலே, வாழ்ந்த, தேசிய கீதத்தை இயற்றிய இரபீந்திரநாத் தாகூர் அவர்களின் 125ஆவது பிறந்த நாள் இன்று. எனவே இந்த நாளை நினைவு கூறும் விதத்தில், ஒருமைப்பாட்டை பெரிதும் விரும்புகிற, ஆதரிக்கிற நம்முடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் இருக்கிற இந்த மாநில அரசின் சார்பில் இந்த மன்றத்தின் சார்பில், இந்திய ஒருமைப்பாட்டை வலியுறுத்துகிற விதத்திலே கருத்துக்களை வெளியிட வேண்டுமென நான் இந்த நேரத்திலே அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்கப் பேரவைத் தலைவர் அவர்களே, உலகப் புகழ்பெற்ற வங்க மகா கவிஞரும், நாட்டுப்பற்று மிக்க நாவலரும், தேசப்பிதா காந்தியடிகளுக்கு 'மகாத்மா' என்ற பெயரை சூட்டியவரும், தேசப் பிதா காந்தி

யடிகளால், 'குருதேவர்' என அழைக்கப்பட்டவரும், பன்னாட்டு பல்கலைக்கழகமான 'விஸ்வபாரதியை' ஸ்தாபித்தவரும், உலகப் புகழ்பெற்ற அமர இலக்கியமான 'கீதாஞ்சலி'யை இயற்றியவரும், நம்முடைய தேசிய கீதமான 'ஜன கண மன'வை இயற்றியவருமாகிய, நோபல் பரிசு பெற்ற மேதை, மகரிஷி இரபீந்திரநாத் தாகூர் அவர்களுடைய 125ஆவது பிறந்த நாள் இன்றைக்கு. . . .(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நானே அவையின் சார்பிலே ஒரு வாழ்த்து எழுதி இருக்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் :— அந்த 125ஆவது பிறந்த நாளையொட்டி இந்தியப் பேரரசு இந்த நல்ல நாளை விடுமுறை தினமாக அறிவித்து இருக்கிறது. எனவே உலகப் புகழ்பெற்ற அந்த மேதைக்கு 'புகழாஞ்சலி' செலுத்துகின்ற வண்ணம் தமிழக மக்களின் சார்பிலே நாமும் நினைவு கூர்வதும், புகழ் சொல்வதும், வாழ்த்து சொல்வதும் பொருத்தமாக இருக்கும் என நான் கருதுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இராமலிங்கம் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்களும் குறிப்பிட்டது போல இன்றைக்கு, இந்தியாவிற்கே புகழையும், பெருமையையும் தேடித் தந்த, உலகப் புகழை ஈட்டித்தந்த கவிஞர் இரபீந்தரநாத்தாகூர் அவர்களுடைய 125ஆவது ஆண்டு பிறந்த நாள் விழா என்ற முறையில் இந்தியாவே கொண்டாடுகிறது. அந்தத் தன்மையில் இந்த அவை தன்னுடைய மகிழ்ச்சியையும், வாழ்த்துக்களையும், பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கின்ற ஒரு வாய்ப்பை தங்கள் மூலமாக ஏற்படுத்திக்கொள்வதும் முறையான ஒன்றுதான். மாண்புமிகு உறுப்பினர் திரு சித்தன் அவர்கள் சொல்லியதைப் போன்று இந்த 20ஆவது நூற்றாண்டினுடைய இணையற்ற ஒரு பெருங்கவிஞராக விளங்கி இந்தியாவினுடைய புகழையும், பெருமையையும் நிலைநாட்டுவதற்கு இரபீந்தரநாத் தாகூர் அவர்கள் தங்களுடைய கவித்திறன் முழுவதையும் பயன்படுத்தினார். தம்முடைய தாய்மொழியாக இருக்கின்ற வங்க மொழியில் அவர்கள் எவ்வளவு ஆர்வம் கொண்டிருந்தார்கள் என்பதும், அந்த மொழியை வளர்ப்பதில் எவ்வளவு கண்ணும் கருத்துமாக விளங்கினார்கள் என்பதும், மக்களுடைய உள்ளத்தை கவருகின்ற அளவுக்குக் கவித்திறன் படைத்த அந்தக் கவிகளாலே ''பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திட வேண்டும்'' என்று பாரதியார் கூறியதற்கு இணங்க புவியை பாலித்து வந்தார் என்பதும் உலகம் நன்கு அறியும். அந்த வகையில், பல்லாண்டுகாலம் பலதடவை அவர்கள் உலக சுற்றுப்பயணம் சென்றவர்கள். பல பேரறிஞர்களோடு தொடர்பு கொண்டவர். ஜார்ஜ் பெர்னாட் ஷா, டால்ஸ்டாய் போன்றவர்களோடும் ஈன்ஸ்டின் போன்றவர்களோடும்

தொடர்பு கொண்டு அவர்களால் பெரிதும் மதிக்கப்பட்டவர்கள். நோபல் பரிசு பெற்று இந்தியாவுக்கு ஒரு பெருமைத் தேடித் தருகின்ற அளவுக்கு, இலக்கியத் துறையிலே நோபல் பரிசு வாங்கியவர் இரபீந்தரநாத் தாகூர். அப்படிப் பட்டவருடைய பிறந்த நாளிலே இந்தப் பேரவையும், முழு மகிழ்ச்சியோடு பங்குகொள்கிறது என்பதையும், இந்தப் பிறந்த நாள் விழாவிலே, அவர்களுடைய பெயரும் புகழும் நீண்ட பெருங்காலம் நின்று நிலவ வேண்டுமென்ற முறையில் வாழ்த்துக் களை கூறிக்கொள்கிறது என்ற முறையில் பங்குகொள்கிறது என்ற முறையில் தங்கள் மூலமாகவே அந்த வாழ்த்தை இந்த அவையின் சார்பாக தெரிவித்துக்கொள்வது மிகப் பொருத்தமாக இருக்கும் என்பதை நானும் ஒப்புக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு இரபீந்திரநாத் தாகூர் அவர்களின் 125-வது பிறந்த நாள் விழாவை என் சார்பிலும் இந்தப் பேரவையின் சார்பிலும் நினைவு கூற விரும்புகிறேன். அவர்கள் தேசிய இயக்கத்தில் பெரும் பங்கு கொண்டவர்கள். சிறந்த தத்துவஞானி மட்டும் அல்லாமல் ஒரு சிறந்த தேச பக்தராகத் திகழ்ந்தார். அவருக்கு ஆங்கில அரசால் அளிக்கப் பட்ட 'Knighthood' என்ற பட்டத்தை தம் தாய் நாட்டின் பெருமை கருதி உதறித் தள்ளினார். அவருடைய மிகச் சிறந்த படைப்பான கீதாஞ்சலி என்ற நூலினால் அவருக்கு உலக மாபெரும் பரிசான நோபல் பரிசு வழங்கப்பட்டது. அவர் உருவாக்கிய சாந்தி நிகேதன் இந்திய கலாச்சாரத்தை உலகுக்கு எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது. அவர் உலக சமாதானத் திற்காகவும், உலக ஒற்றுமைக்காகவும் பாடுபட்டார். அதை உலகம் முழுவதும் பரப்புவதில் தம் வாழ்நாளை ஈடுபடுத்திக் கொண்டார். அவர் மனித குல மாணிக்கமாக திகழ்ந்தார். அவர் எழுதிய கவிதை இன்று தேசீய கீதமாக பாடப்படுகிறது. இன்பத்திலும் துன்பத்திலும் வாடுகிற உள்ளங்களோடு நாமும் பகிர்ந்து கொள்வோம். அதுவே இறைவனுக்கு அளிக்கப்படுகின்ற மலர்களாகும் என்பது அவருடைய கொள்கை ஆகும். உங்கள் அனைவரின் சார்பிலும், என் சார்பிலும் அவருக்கு நமது உள மார்ந்த அஞ்சலியை செலுத்துவோமாக.

(ஆ) திரு. காமராசர் நினைவாலயம் பராமரிப்பு குறித்து.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலை வர் அவர்களே, இதற்கு முன்னால் நடைபெற்ற ஒரு கேள்வியிலே எங்களுடைய கட்சியின் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரவீந்திரன் அவர்கள் அண்ணா நினைவாலையத்தைப் போலவே பெருந்தலைவர் காமராசர் நினைவாலயம் பரா மரிக்கப்பட வேண்டும்...........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கம்பேர் பண்ண வேண் டாம். (குறுக்கீடு) சுமுகமாக இருக்க வேண்டும் என்பதற்காகத் தான் சொல்கிறேன். அண்ணா நினைவாலயத்தைப் பரா மரிக்கிற அளவிற்கு என்று சொல்கிற அந்த வாசகங்களில் தவறு இல்லை. என்ன தேவை என்று சொல்லுங்கள் கம்பேர் பண்ணாதீர்கள், (குறுக்கீடு).